# Gospel Truth
# காஸ்பல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 8 – FOR PRIVATE CIRCULATION ONLY – இதழ் - 8


## நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா?

“அப்பொல்லோ என்பவன் கொரிந்து பட்டணத்திலே இருக்கையில், பவுல் மேடான தேசங்கள் வழியாய் போய் எபேசுவுக்கு வந்தான் ; அங்கே சில சீஷரைக் கண்டு நீங்கள் விசுவாசிகளானபோது, பரிசுத்த ஆவியை பெற்றீர்களா என்று கேட்டான்” (அப்போ 19:1-2).

எபேசுவில் இருந்த சீஷர்கள் மனந்திரும்புதலை விசுவாசித்தார்கள். ஆனால் இயேசு கிறிஸ்துவின் வழியாய் வருகிற இரட்சிப்பைக் குறித்து ஞானமற்றவர்களாயிருந்தார்கள். இதைக் குறித்த நற்செய்தியை கேட்ட பின்பு அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்த போது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்.

இன்று பல மக்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படவும், இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் ஜெபிக்கிறார்கள். ஆனால் பரிசுத்த ஆவியின் அனுபவத்திற்குள்ளாக பிரவேசிப்பதில்லை. பரிபூரணமான ஆவிக்குரிய அனுபவத்தை தவறவிடுகிறார்கள். சிலர் வேகமாக தேவனுக்கென்று ஆவிக்குரிய காரியங்களில் அனலாய் எழும்புவார்கள். அப்படியே நாட்கள் செல்ல செல்ல உலக கவலைகளினால் பின் வாங்கிப் போய் தேவனிடத்திலிருந்து விலகி தேவ ஆவியின் அனுக்கிரகத்தை இழந்துபோய் விடுகிறார்கள். சிலர் தன் பாவ வாழ்க்கைக்கு திரும்ப செல்வதில்லை என்றாலும், ஆவிக்குரிய காரியங்களில் அதிககவனம் செலுத்தாமல் மந்தமாய் இருந்து கொண்டு ஒருவித தெய்வபக்தியை மட்டும் வெளிப்படுத்துகிறார்கள்.



### தேவன் பரிசுத்த ஆவியின் வரத்தை உங்களுக்குத் தர விரும்புகிறார்

பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பு, பேதுரு கிறிஸ்துவுக்கென்று தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். கெத்சமனே தோட்டத்தில் இயேசு கிறிஸ்துவை பிடிக்க வந்த போது, உறையிலிருந்து வாளை எடுத்து, அவர்களோடு வாக்குவாதம் செய்ய தயாரானார். அதே வேளையின் சில மணித்துளிகளுக்கு பிறகு மூன்று முறை அதே பேதுரு இயேசுவை மறுதலித்தார். மருட்சியினாலோ, மன அழுத்தத்தினாலோ, மரிக்கும் வேளை வந்தாலும் கூட தேவனை மறுதலிக்காத விசுவாச பெலன் பேதுருவினிடத்தில் அன்று காணப்படவில்லை.

பேதுரு விசுவாசத்தின் வல்லமையை இழந்து போய்விட்டார். பெந்தேகோஸ்தே நாளின் போது பரிசுத்த ஆவி ஊற்றப்பட்ட பின்பு புது தைரியத்தோடும், வல்லமையோடும், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவைக் குறித்து சாட்சி கொடுத்தார். பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், கிருபையினாலும், நிரப்பப்பட்டார். அவர் ஒருபோதும் திரும்பி தன் சொந்த தொழிலான மீன் பிடித்தலுக்கு செல்லவேயில்லை. தேவனால் அபிஷேகிக்கப்பட்டு பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தார்.

இன்றைய நற்செய்தி என்னவெனில் கர்த்தர் ஆவிக்குரிய வரத்தை உங்களுக்குத் தர விரும்புகிறார். அதினிமித்தம் நீங்கள் பரிசுத்தமும், உறுதியான நம்பிக்கையுமுள்ள வாழ்க்கை வாழ அவர் விரும்புகிறார். மனிதன் தன் சொந்த பெலத்தினால்


| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா? |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்




## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2 தீமோ 3 : 16-17 ; 2 பேது 1 : 20-21 ;

மத் 24 : 35

**அன்பு**

மத் 22 : 37-40 ; யோவா 14 : 21-23,

1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3 : 19 ; 17 : 30 ; 2 கொரி 7 : 10

**புதுசிருஷ்டி**

யோவா 3 : 3-7 ; 2 கொரி 5 : 17 ; ரோம 6 : 1-4,

எபே 2 : 1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1 யோவா 5 : 18 ; மத் 1 : 21 ; யோவா 8 : 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1 : 8 ; 15 : 8-9 ; 19 : 2

**பரிசுத்தம் :**

லூக் 1 : 73-75 ; எபி 12 : 14 ; 1 பேது 1:15-16 ;

தீத்து 2 : 11-12 ; ரோம 6 : 22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17 : 20-21 ; ரோம 14 : 17 ; யோவா 18 : 36.

**சபை-** அப் 2 : 47 ; எபே 4 : 4-6 ;

1 கொரி 12 : 12-13 ; கொலோ 1 : 18

**ஒற்றுமை**

யோ 17 : 20-23 ; கலா 3 : 28 ;

வெளி 18 : 2-4 ;

**நியமங்கள்**

மத் 28 : 19-20 ; 26 : 26-30 ;

1 கொரி 11 : 23-27 ; யோவா 13 : 14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 : 4, 5, யாக் 5 : 13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6 ; லூக் 16 : 18 ; ரோம 7 : 2-3 ;

1 கொரி 7 : 10, 11 ;

**வெளிப்புற தோற்றம்**

1 தீமோ 2 : 9-10 ; 1 கொரி 11 : 14-15 ;

உபா 22 : 5

**கடைசிகாலம்**

2 பேது 3 : 7-12 ; யோவா 5 : 28, 29 ;

2 கொரி 5 : 10 ; மத் 25 : 31-46

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4 : 23, 24 ; எபே 5 : 19 ;

2 கொரி 3 : 17 ;

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 : 15 ;

பரிசுத்தமாய் வாழ்வது கடினம். இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, நமக்காக சிந்தின இரத்தத்தின் வல்லமையினால் நம்முடைய அக்கிரமங்களும், மீறுதல்களும் மன்னிக்கப்பட்டது. ஆகவே நாம் மனந்திரும்பும்போது, கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்பட்ட பாத்திரமாய் விளங்குகிறோம். நாம் அதோடு நின்றுவிடக்கூடாது. பரிசுத்த ஆவியை நாம் பெற்றுக்கொள்ளும்படியாகத்தான் அவர் திரும்பவும் வந்தார்.

ஒருவர் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ள தயங்கும் போது, சாத்தான் அசுத்த உலக பாவங்களால் அவரை ஆட்கொள்ள முயற்சிக்கிறான். ஆகவேதான் பரிசுத்த ஆவி நம்மை நிரப்பும் போது மாத்திரமே இந்த உலகத்தையும், பிசாசையும் ஜெயிக்க முடியும். தேவ வார்த்தைக்கு கீழ்படிந்து, பரிபூரணமான, நிறைவான பரிசுத்தவாழ்வை வாழ இயேசு கிறஸ்து நம்மை அழைத்திருக்கிறார்.

முழுமையான இரட்சிப்பின் அனுபவம் என்பது மிக ஆச்சரியமானது. அது தேவனுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு. நாம் செய்த தப்பிதங்களை மன்னித்து நம்மை கழுவி, பரிசுத்தப்படுத்தி தேவ ஆவியினால் ஞானஸ்நானம் கொடுத்தார். அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வின் அனுபவம் என்பது வேதனையில் வெற்றி, துயரத்தில் ஆறுதல், சோதனையில் அதிகாரம், புயல் போன்ற போராட்டத்தில் சமாதானம் என்பதேயாகும். அனுதின கிறிஸ்தவ வாழ்க்கையே அக்கினி போன்ற வாழ்வாக மாற பரிசுத்தஆவி நமக்கு உதவிசெய்கிறது. பரிசுத்த ஆவியின் வரம் என்பது இன்று அநேக கிறிஸ்தவர்களுக்கு கண்டிப்பாக தேவைப்படும் தலையாய காரியமாகும். அவர் வருகைமட்டும், இந்த உலகில் பாவம் செய்யாமல் வாழ பரிசுத்த ஆவியின் வல்லமை நமக்கு அனுதினமும் தேவை.

பரிபூரணமான இரட்சிப்பின் அனுபவத்தை நீங்கள் சுதந்தரித்துக் கொண்டீர்களா? நீங்கள் விசுவாசிக்கிற பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொண்டீர்களா?

## காஸ்பல் ட்ரூத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***E.mail*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர்.டபிள்யூ.எஸ்.வேதா, காஸ்பல் ட்ருத், 2/227 - கோலார்பட்டி பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

வேதவாக்கியம் சொல்லுகிறபடி “ என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார் (தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு கிறிஸ்து இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை) ” – யோவான் 7 : 38, 39.

உள்ளார்ந்த ஆவிக்குரிய வாழ்வில்தான் நாம் முழுமையான இரட்சிப்பின் அனுபவத்தை உணர முடியும். ஆவியினாலே தேவனுடைய பிரசன்னத்தை உணருகின்ற நமக்கு அது புது வாழ்வையும், உற்சாகத்தையும் தரவல்லது. பூமிக்குரிய கூடாரத்திலே வசிக்கும் நமக்கு ஆவிக்குரிய அனுபவம் என்பது எவ்வளவு மேன்மையுள்ளதும், ஆச்சரியமுமானது.

இந்த இதழில் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதலைக் குறித்து எழுதியுள்ளேன். இதைக் குறித்த விளக்கம் பெரியது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் தேவையான ஒரு அனுபவம். அளவுக்கதிகமான உலகப்பற்றும், மாம்ச இச்சையுமே, பல கிறிஸ்தவர்கள் இன்று பரிசுத்தவான்களாய் வேஷமிட காரணமாய் அமைந்து விடுகிறது. ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்வின் பிரச்சனைகளை மாத்திரம் அல்ல, திருமண வாழ்க்கையிலும், சபை கூடி வருகிற விதத்திலுள்ள பிரச்சனைகளையும் கூட பரிசுத்த ஆவியானவரால் மாற்ற முடியும்.

தேவனுடைய வரங்கள்: தேவகிருபை, பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், புனிதத்துவம், பரிபூரணம் இன்னும் பல, ஆயினும் இவையாவற்றையும் குறித்த போதனைகளில் தெளிவான போதுமான விளக்கமில்லை. தேவனுடைய சரீரமாகிய சபையிலே இதைக்குறித்த பற்பல விளக்கங்களுண்டு. சத்தியத்தைக் குறித்த கற்பனையான விளக்கங்களோடு கூடிய போதனைகளை அதிகார ஆணையோடு எடுத்துரைப்பதை நம்பாமல், தேவனுடைய வசனத்தை நம் வழிகாட்டியாகக் கொண்டு, அதற்கான விளக்கங்களை தேவ ஞானத்தோடு விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த சத்தியத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வது மாத்திரமல்ல, உண்மையான ஆவிக்குரிய அனுபவத்தை பெற்று வாழ வேண்டும்.

இந்த சத்தியம் கடினமானதும், குழப்பமானதுமல்ல. பரிசுத்த ஆவி நம் வாழ்வில் வல்லமையை கொண்டு வரும். தேவன் தம்மை நம்புகிற விசுவாசிகளுக்கு வல்லமையையும், மகிமையையும் தந்து வழிகாட்டியாய் இருக்க விரும்புகிறார். நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவோம் என வேத வசனம் கூறுகிறது. இந்த இரண்டும் ஒன்று அல்ல. ஆனால் இரண்டுக்கும் வெகு தூரமும் இல்லை. தாங்கள் பெற்ற பரிசுத்த ஆவியை சில சமயங்களில் ஜனங்கள் இழந்து போய்விடுகிறார்கள். இரண்டு காரியங்களும் இயேசுகிறிஸ்துவால் உருவாக்கப்பட்டவையே. ஆவிக்குரிய அனல் அற்று பலர் இன்று வாழ்கிறார்கள். தனிப்பட்டவிதமாக நான் தேவனுடைய வல்லமை என்னை பரிசுத்தப்படுத்தி ஊக்கப்படுத்தி, நிலைநிறுத்தி வாழ வைத்ததை உணர்ந்து கொண்டே இருக்கிறேன். நீங்கள் இதுவரை பரிசுத்த ஆவியைப் பெறாவிட்டால் இப்போதே ஜெபித்து, தேவனுடைய பரிபூரணமான வல்லமையை பரிசுத்த ஆவியின் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

# எப்போது தேடவேண்டும்



**பரிசுத்த ஆவியைப் பெற**

பல கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படியாக அவரைத் தேட தாமதிக்கிறார்கள். நீண்ட நாட்கள் காத்திருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பின் வல்லமையை இழந்து போகிறார்கள்.

ஒருவர் மனந்திரும்பி, பாவமன்னிப்பை பெற்றுக் கொண்ட பிறகு, பரிசுத்த ஆவியின் அனுக்கிரகத்தைப் பெறும்படியாக எவ்வளவு நாட்கள் காத்திருக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்கு அதைக்குறித்து சொல்லாவிட்டாலும் உவமைகளின் வாயிலாக நாம் உணர்வது என்னவெனில், கிறிஸ்துவுக்குள் புதிதாக்கப்பட்டவர்கள் அவருடைய நிறைவான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளக் கடவோம்.

இயேசு கிறிஸ்து தம் சீஷர்கள் உலகத்தை எதிர்கொள்ள தேவையான வல்லமையின்றி அவர்களை அனுப்ப விரும்பாமல் நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் - லூக் 24 : 49. சவுல் பவுலாய் மாறிய சில நாட்களுக்குள்ளாகவே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டார். சமாரியாவின் ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் சீஷர்கள் அவர்களில் சிலரை பரிசுத்த ஆவியைக் குறித்த போதனைகளுக்கு கொண்டு சென்றார்கள்.

தாமதித்தால் மிகப்பெரும் ஆபத்து. நீதியுள்ள எந்த மனுஷனும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ள பாத்திரவான்களே.

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்

### வேத வாசிப்பு

பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்த போது அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போல, வானத்திலிருந்து சடுதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்... - அப் 2 : 1 - 4.

### விளக்கம்

ஜனங்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற்று, இரட்சிக்கப்படவும் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளவுமே இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தார். தெய்வீக வல்லமை, வழி நடத்துதலோடு பரிசுத்த வாழ்க்கை வாழவே ஆவியானவர் நமக்கு வல்லமையைத் தருகிறார்.

### I.பரிசுத்த ஆவியைக் குறித்த தீர்க்கதரிசனம்

A.யோவேல் 2 : 28 - 29 என் ஆவியை ஊற்றுவேன்

B. எசேக் 36 : 26 - 27 உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து

### II.பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தம்

A. மத் 3 : 11 பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார்

B. யோவான் 14 : 16 சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளன்

C. லூக் 24 : 49 நான் உங்களுக்கு அனுப்புகிறேன்

D. அப் 1 : 4 - 5 பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருங்கள்

### III.பரிசுத்த ஆவியின் கூடாரம் / வாசஸ்தலம்

A.அப்போ 7 : 44 - 49 பழைய ஏற்பாட்டு வாசஸ்தலம் / ஆலயம் / கூடாரம்

B.1 கொரி 3 : 16 - 17 நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்

### IV.பரிசுத்த ஆவி, எல்லா ஜனங்களுக்கும் வரப்பிரசாதம்

A. அப்போ 2 : 38 - 39 உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்

B. அப்போ 10 : 45 புறஜாதிகள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுதல்

### V.பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்திற்கு நிபந்தனைகள்

A. அப்போ 2 : 38 மனந்திரும்புங்கள்

B. அப்போ 19 : 2 விசுவாசியுங்கள்

C. அப்போ 5 : 32 கீழ்படியுங்கள்

D. ரோமர் 12 : 1 - 2 மறுரூபமாகுங்கள்

### VI.சமயம் அல்லது விசுவாச சட்டம்

A. அப்போ 8 : 5 - 6, 12 -17 சமாரியாவில் சுவிசேஷம் பிரசங்கித்தல்

B. அப்போ 9 : 17 அப்போஸ்தலனாகிய பவுல்

C. அப்போ 10 : 1- 2, 44 - 47 கொர்நேலியுவின் வீடு

D. அப்போ 19 : 1 - 7 எபேசுவிலிருந்த சீஷர்கள்

### VII.பரிசுத்த ஆவியின் வேலைகள்

A. அப்போ 1 : 8 பெலனடைந்து, சாட்சிகளாயிருப்பீர்கள்

B. ரோமர் 15 : 16 கிருபையினால் தைரியம்

C. அப்போ 15 : 8 - 9 இருதய பரிசுத்தம்

D. யோவான் 14 : 26 போதித்து, சமாதானத்தை தருவார்

E. யோவான் 16 : 13 வழிநடத்துவார்

F. எபேசி 1 : 13 முத்திரை போடப்பட்டீர்கள்

G. 2கொரி 3 : 6 ஜீவனை தருகிறது

H. 1கொரி 12 : 4 - 11 ஆவியின் வரங்கள்

I. ரோமர் 5 : 5 தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது.

J.எபிரேயர் 2 : 11 யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்.

### VIII.பரிசுத்த ஆவியின் சாட்சி

A. ரோமர் 8 : 16 ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார்

B. கலா 5 : 22 - 25 ஆவியின் கனி

C. ரோமர் 14 : 17 தேவனுடைய ராஜ்யம்

### முடிவு

உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங் கேட்டால், அவனுக்கு கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால், அவனுக்கு பாம்பைக் கொடுப்பானா? பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார் - லூக் 11 : 11 - 13

# பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்

## ஒருநோக்கு வேதாகம செய்தி

**பரிசுத்த ஆவியை கொடுத்தல்**

பெந்தெகொஸ்தே நாளின்போது, ஒருமனப்பட்டு,ஓரிடத்தில் கூடியிருந்த 120 பேர் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள்(அப்போ 2 : 1-4) . கர்த்தராகிய தேவன் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பரிபூரணமாக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெற்றது முதல் புதிய ஏற்பாட்டு சபையாகும். சம்பிரதாயங்கள் நிறைந்த காலகட்டத்தில், சடங்காச்சார ஆராதனை முறைகளோடு, பாவம் நிறைந்த ஆவிக்குரிய வாழ்வு தவறியபோதுதான் இயேசுகிறிஸ்து மூலமாக இப்பாவ மனுக்குலத்திற்கு மீட்பும்,ஜெயமும்,பரிசுத்த ஆவியின் வல்லமையும் அவர் இரத்தம் சிந்தி மரித்ததின் பிராயச்சித்தமாக உண்டாயிற்று.

**பிதாவின் வாக்குத்தத்தம்**

எசேக்கியேல் 36 : 27 உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களை கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன் என்று கர்த்தர் அனுக்கிரகம் பண்ணினார்.மனிதன் தான் செய்த அநீதியில் நீடித்திருக்க வேண்டியதில்லை.

தேவன்தாமே அருளிய அவரது மீட்பின் வல்லமையினாலும்,பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் ஒரு மனிதன்,பாவம் சூழ்ந்த இந்த உலகில் நீதியாய் நடக்க வழிவகுக்கிறது.அவர் திரும்பவும் அந்த நாளைக் குறித்து நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்றார் (யோவேல் 2 : 28).



## பிதாவின் வாக்குத்தத்தம்

**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைவீர்கள்**

அப்போ 7 : 8

**அவருடைய வாசஸ்தலம்**

பழைய ஏற்பாடு காலத்தில் முதலாவது கூடாரமாகிய வாசஸ்தலத்திலும், ஆலயத்திலும் தேவன் மனிதனோடு தம் மகிமையை வெளிப்படுத்தினார். இது மாதிரியான கூடாரங்களும் ,ஆலயமும் கைகளினால் செய்யப்பட்டது.ஆகிலும் உன்னதமானவர் கைகளினால் செய்யப்பட்ட ஆலயங்களில் வாசமாயிரார். நீங்கள் எப்படிப்பட்ட வீட்டைக் கட்டுவீர்கள். நான் தங்கியிருக்கத்தக்க ஸ்தலம் எது?(அப்போ 7:45-49). இதன் பதில் 1கொரி 3 :16-17 ல் சொல்லப்பட்டுள்ளது. நீங்களே தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால்,அவனை தேவன் கெடுப்பார்.தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம். கர்த்தர் பரிசுத்தத்தில் வாசம் பண்ணுகிறவர் ஆகையால் கைகளினால் செய்யப்பட்ட பூமிக்குரிய கூடாரமாகிய ஆலயத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுவதில்லை. மாறாக பாவம் கழுவப்பட்டு, பரிசுத்தமாக்கப்படும்போதே அவர் வாசம்பண்ண ஏற்ற ஸ்தலமாகும்.

**பரிசுத்த ஆவியானவருக்கு வழியை ஆயத்தப்படுத்தினார் இயேசு**

இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் கொடுக்கப்போகிற ஞானஸ்நானத்தைக் குறித்து யோவான்ஸ்நானகன் கூறினார். மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் - மத் 3 : 11. வழியை ஆயத்தம் பண்ணும்படியாகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை , இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் (லூக்கா 24 : 49).

**எல்லோருக்கும் அருளப்படும்**

ஆச்சரியமான பரிசுத்த ஆவியின் வரமாகிய வலலமை முதலாவது, பெந்தேகொஸ்தே நாளின் போது, ஓரிடத்தில் ஒருமனப்பட்டு கூடிவந்த யூதர்களாகிய விசுவாசக் கூட்டத்தார் மேல் அருளப்பட்டது. பின்பு யாவருக்கும் அருளப்படுவதாக தேவன் வாக்குப் பண்ணினார்.




வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது – அப் 2 : 39. யூதர்களுக்கு மாத்திரமல்ல புறஜாதிகளாகிய எல்லா ஜனத்திற்கும் பரிசுத்த ஆவி அருளப்படும். பேதுருவோடே கூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்து பிரமித்தார்கள். கர்த்தருடைய நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கட்டளையிட்டான் – அப்போ 10 : 45. உலகம் பொல்லாங்கனுக்குள்ளாய் இருந்த போதும் கூட, தம்மை விசுவாசிக்கிறவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் முழு பெலத்தையும், வல்லமையையும் தருகிறார்.

சிலர் கடுமையான ஜெபத்தின் மூலமாகவோ அல்லது பரிசுத்த ஆவியின் உதவியோடுதான் தேவன் நமக்கு பதிலளிக்க வல்லவர் என எண்ணுகிறார்கள். மாறாக பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய கட்டளைகளை காத்துக் கொள்ளுகிறவர்களுக்கு அருளப்படும் வரம்.

### பரிசுத்த ஆவியை எப்படி பெற்றுக் கொள்வது

ஒருவர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் – அப்போ 2 : 38. மனந்திரும்பிய, ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியின் வரமுண்டு. நீங்கள் விசுவாசிகளான உடன் பரிசுத்த ஆவியை பெற முடியாது. மாறாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார் – அப்போ 19 : 2. தேவன் தமக்குக் கீழ்ப்படி கிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள் – அப்போ 5 : 32. பரிசுத்த ஆவி, சுத்த இருதயத்தை நிரப்பும் போது நம் வாழ்வை தேவனுக்கென்று அபிஷேகம் பண்ணப்பட்டு அர்ப்பணிப்போம்.

சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை – ரோமர் 12 : 1. பழைய ஏற்பாட்டில், பரிசுத்த ஆவியானவர் பலிபீடத்தில் அக்கினி வடிவில் வெளிப்பட்டதால், தேவசித்தம் நிறைவேறியதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்போது மனந்திரும்பி, நம்பி கீழ்ப்படிந்து அபிஷேகம் பண்ணப்பட்டு, தேவனுடைய பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும்.

### இரண்டு விதமான தனித்துவமான வேலைகள்

பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல் என்பது வேறு, செவ்வைப்படுத்துதல் என்பது வேறு, இரட்சிப்பின் இந்த இரண்டு வெவ்வேறான அனுபவங்களைக் குறித்த சாட்சிகள் திருச்சபைகளில் இருந்ததைக் குறித்து அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளது. சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும், யோவானையும் அவர்களிடத்தில் அனுப்பினார்கள். இவர்கள் வந்த போது அவர்களில் ஒருவனும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தை மாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம் பண்ணினார்கள் – அப்போ 8 : 15. கர்த்தர் முதலாவது அவர்களை இரட்சித்து, பின்பு பரிசுத்த ஆவியை அருளினார். பவுலாக மாறிய சவுல், முதலாவது தேவனை ஏற்றுக் கொண்டு, பின்பு அனனியாவின் ஜெபத்தின் மூலம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார். அதே போல, கொர்நெலியு மற்றும் அவரது குடும்பத்தினர் (அப் 10) எபேசுவிலிருந்த சீஷர்கள் (அப் 19) என எல்லா கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டனர்.

### பரிசுத்த ஆவியினால் மேற்கொள்ளும் வல்லமை உண்டாகும்

பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களாகிய நாம் நம் வாழ்வில் பல ஆவிக்குரிய மாறுதல்களை உணரலாம். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளும் போது வரும் வல்லமையின் மூலம் பாவத்தையும், இந்த உலக இச்சைகளையும் மேற்கொள்ள முடியும். ஆகவே தேவ வல்லமையினால் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து வாழ வழி வகுக்கிறது. பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் – அப்போ 1 : 8.

பெலவீன நேரத்திலும் , உபத்திரவங்களின் போதும், தோல்வியின் போதும் ஜெயத்தை தருகிறவர் பரிசுத்த ஆவியானவரே.பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட வேண்டும் – ரோமர் 15 : 16. அவர்கள் தனித்துவமாய் , அபிஷேகிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் வல்லமையை தரித்தவர்கள். யாவருடைய இருதயமும் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படும் – அப் 15 : 9 பரிசுத்த ஆவியின் வல்லமையின் வழியாக, மாம்ச பெலவீனங்கள் கட்டப்பட்டு,

தெய்வீக அனுபவத்தை பெற்று சாத்தானுடைய கிரியைகளுக்கு இல்லை எனவும், இயேசு கிறிஸ்துவுக்கே ஆம் என்று சொல்லுகிற கிருபை பெற்றவர்களாகிறோம்.

**பரிசுத்த ஆவியின் மற்ற செயல்கள்**

பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து – யோவான் 14 : 26. அவரே தம் ஜனங்களை வழிநடத்துகிறவர், வரங்களினால் நிரப்புகிறவர் – 1 கொரி 12 : 4 – 11. நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது – ரோமர் 5 : 5. பரிசுத்தம் செய்கிறவரும், பரிசுத்தம் செய்யப் படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள் – எபி 2 : 11. பரிசுத்த ஆவி முத்திரையாயிருக்கிறது. எழுத்து கொல்லுகிறது. ஆவியோ உயிர்ப்பிக்கிறது – 2 கொரி 3 : 6. பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களின் வாழ்வில் உண்மையான ஆராதனை, பரிசுத்தம், தேவனுக்குண்டான துதி இருக்கும்.

**பரிசுத்த ஆவியின் அடையாளங்கள்**

பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல் என்பது செயல் விளக்கமோ அல்லது உணர்ச்சி வெளிப்பாடோ அல்ல மாறாக உள்ளார்ந்த ஒரு நம்பிக்கையின் அனுபவம். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சாட்சி கொடுக்கிறார் – ரோமர் 8 :15. பரிசுத்த ஆவியின் அடையாளமாக பற்பல புரியாத பாஷைகளைக் கொண்டதாக தவறான போதனைகளுண்டு, ஆனால் வேதாகமப்படி ஆவியின் கனியோ , அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் – கலா 5 : 22-23. பரிசுத்த வாழ்வே முழுமையான ஆதாரம்.

**ஆவியை பெற்று மேற்கொள்பவராக இருங்கள்**

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும், குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது – ரோமர் 14 : 17. அநேக கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய அனுபவத்தோடே போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆவி தேவனுடைய வாஞ்சையை நிறைவேற்ற ஆயத்தமாயிருப்பினும், மாம்சமோ பெலவீனமுள்ளது. உள்ளார்ந்த ஆவியின் அனுபவத்தினால் வாழ்வின் பல விதமான போராட்டங்களுக்குப் பதிலுண்டு. பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார் (லூக் 11:11-13).

---

## கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** ஒருவர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டபின், மனுஷீக பெலவீனங்களிலிருந்தும், கோபதாபங்களிலிருந்தும் விடுதலை அடைந்து விடுவாரா?

**பதில் :** இந்த சரீரத்தில் நாம் இருக்கும் வரை, உலகத்திற்கேற்ப மாம்சீக பெலவீனங்கள் இருந்துகொண்டே இருக்கும். ஆனால் பரிசுத்த ஆவியை நாம் பெற்றுக் கொள்ளும் போது தேவ வல்லமையுடன் கூடிய தெய்வீக அனுபவத்தினால் அதை மேற்கொள்ளும் தைரியம் நமக்குள் உண்டாகும். அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 9 : 27 ல் இவ்வாறு கூறுகிறார்.

மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். நாம் தொடர்ந்து சுயத்தை சாகடித்து, இயேசுவுக்கென்று வாழ்வை அர்ப்பணிப்போம். இவ்வாறு தொடர்ந்து கர்த்தருக்கு கனி கொடுக்காதவர்களாய் இருப்பின் நாம் இரட்சிப்பை இழந்து போவோம்.



## கிருபையில் வளர

மனிதன் பாவம் செய்ய துணிகரமாயிருக்கிறான். பரிசுத்த ஆவியைப் பெறும் முன்பதாக ஒருவருடைய வாழ்வு பாவத்தைப் பற்றியதாயிருக்கும். ஆனால் பரிசுத்த ஆவியைப் பெற்ற பின் அவருடைய வாழ்வு முற்றிலும் பரிசுத்தமாய் தேவனுக்கேற்ற பரிசுத்த பயணத்தில் வளர்ந்தேறும் படியாக பரிசுத்த ஆவி நம்மில் கிரியை செய்கிறது. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள் – 2 பேதுரு 3 : 18. பரிசுத்த ஆவியின் தன்மையுடன் கூடிய ஆவிக்குரிய வளர்ச்சியை கொண்டு வாழ வேண்டும், பரிசுத்த ஆவியைப் பெற்ற ஜனங்கள் தங்களுக்கான தனித் தன்மையுடன் விளங்குகிறார்கள். ஆகவே அனுதினமும் தேவ சாயலிலே அவர்கள் வளர வழி வகுக்கிறது. தேவ சித்தத்திற்கு உடன்பட்டவர்களாய், தேவனுடைய வழியில் நடப்பார்கள். தேவனுடைய பரிசுத்தவான்கள், பாவமின்றி தேவசித்தத்தப்படி நடப்பார்கள்.

இந்த வளர்ச்சியிலே, மனிதனுடைய தவறுகள் ஏற்படலாம், ஆனாலும் இருதய பரிசுத்தத்தை தேவன் விரும்புகிறார், ஆவிக்குரிய வளர்ச்சி நம்மில் அனுதினமும் உண்டாக வேண்டும்.


**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**

**TAMIL EDITION**



உங்களுக்குத் தெரியுமா?

இயேசுவின் சீடர்கள் எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர், தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். அந்த சத்தம் உண்டானபோது திரளான ஜனங்கள் கூடி வந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள் – அப்போ 2 : 6.



அந்நிய பாஷையின் வரம் என்பது பிரமிக்கத்தக்கது, ஏனெனில் தாங்கள் முன்பு அறியாத பிற பாஷையை அவர்கள் பேசினார்கள்; இதுதான் பின் நாட்களில் அவர்கள் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்கவும், இரட்சிப்பின் அனுபவத்தை எல்லா ஜனங்களுக்கும் சொல்லவும் உதவிற்று.



ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## அவர்கள் அவருடன் இல்லை

**அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனே கூட நடவாமல் பினவாங்கிப் போனார்கள் - யோவான் 6 : 66**

அபிஷேகிக்கப்பட்ட பிதாவினுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து இந்த பூமியிலே தன்னுடைய ஊழியத்தின் போது அநேக எதிர்ப்புகளை சந்தித்தார். ஜனங்கள் மாத்திரமல்ல, அவருடைய போதனைகளைக் கேட்டு விசுவாசித்து, அவரோடே கூட நடந்த சீஷர்களும் கூட பின்வாங்கி அவரது வழியை விட்டு விலகிப் போனார்கள். ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனாகிய கிறிஸ்து என்று அறிந்து விசுவாசமாயிருந்தார்கள்.

சுவிசேஷ கோட்பாடுகளைக் கண்டு பலர் எரிச்சலுற்றார்கள், மாம்ச இச்சை நிறைந்த உணர்வுகளோடு, சத்தியத்திற்கும், பரிசுத்தத்திற்கும் தங்கள் செவியை விலக்குகிறார்கள். அவர்கள் தங்கள் சுயத்தை வெறுத்து முழு இருதயத்தோடு தேவனைத் தேட ஆர்வம் காட்டுவதில்லை .இது தேவாதி தேவனை காயப்படுத்துகிறது. பரலோக மகிமையை விட்டிறங்கி இந்த பூமிக்கு வந்து தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து விலையேறப்பெற்ற அவரது அன்பை வெளிப்படுத்தினார்.

இது இயேசு கிறிஸ்துவின் நாட்களில் நடந்ததாயினும் இப்போது சுவிசேஷ ஊழியத்தில் ஊழியர்களுக்கு சரியான சத்தியத்தை உணர்த்துகிறது. உங்கள் ஊழியத்தையும், தியாகத்தையும், அன்பையும் உதாசினப்படுத்துகிற ஜனங்களும் பலர் உண்டு. இந்த ஜனங்கள் சத்தியத்தை கண்டு எரிச்சலடைந்தவர்களாய் ஐக்கியத்தில் நிலைத்திருப்பதில்லை. அடிக்கடி பல மக்கள் ஊழியக்காரரையே குற்றப்படுத்துவார்கள்.



ஆனால் தங்கள் வாழ்வில் தேவனுடனான ஐக்கியத்தை தொடர எண்ணமாட்டார்கள். மேய்ப்பராம் இயேசுகிறிஸ்துவின் ஆவியிலே அவருக்கு மிகுந்த வேதனையையும், கலக்கத்தையும் இது உண்டாக்குகிறது. உண்மையாயிருங்கள். உலகப்பிரகாரமாக ஒரு பெருங்கூட்டத்தை தேடி ஓடாதீர்கள். அன்பிலும், நீதியிலும், உண்மையிலும் காணப்படுகிற சத்தியத்தை உலகத்திற்கு போதிப்போம்.

சகோதரர், ஆஸ்டிஸ் வில்சன் என்பவர் எப்போதும் சொல்வதுண்டு : “நீங்கள் தேவனைப் பிரியப்படுத்தினால், நீங்கள் ஒவ்வொருவராலும் பிரியப்படுத்தப்பட்டும், ஒவ்வொருவருக்கும் பிரியமுள்ளவர்களாயும் காணப்படுவீர்கள்”.

**தொடர்புக்கு:-**

ஆசிரியர்,
காஸ்பல் ட்ருத்
தேவசபை
2/227 – கோலார்பட்டி
பொள்ளாச்சி வட்டம்
தென் இந்தியா - 642 107

The Editor,
Gospel Truth,
Church of God
2/227 - Kolarpatti
Pollachi Taluk
South India - 642 107.

Email :
editor@thegospeltruth.org

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

Tamil Editor : W.S.Vedha, Church of God, 2/227 Kolarpatti, Pollachi -Taluk,South.India - 642 107.
Phone : 04259 - 280488 Cell: 95975 62641

Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing : V.Selvam, Despatch : V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316